# ஆச்சர்யமான பிள்ளையொன்றை உருவாக்குவதில் பெற்றோரின் வகிபங்கு

## தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்

**மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம்**

9வது மாடி, செத்சிரிபாய, கட்டம் II, பத்தரமுல்ல

## ஆலோசனை

அனுஷா கோகுல பர்ணாந்து
பணிப்பாளர் நாயகம்,
மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம்

## வழிப்படுத்துதல்

சிதாரா ஜயசேன
பணிப்பாளர் (தொழில் வழிகாட்டல்)

## ஒருங்கிணைப்பு

ரோஹித கல்ஹேன
மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்

## எழுத்தாளர் குழாம்

1. திரு.ரஞ்சித் முகுணுவல - ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்
2. திருமதி.சுஜீவா புஷ்ப குமாரி - அங்கத்தவர்
3. திரு.காமினி எபிடகும்புர - அங்கத்தவர்
4. திருமதி.விஜிதா பத்மாவதி - அங்கத்தவர்
5. திருமதி.ரூபிகா கண்ணங்கர - அங்கத்தவர்
6. திரு.உபுல் திலகசிரி - அங்கத்தவர்
7. திருமதி.சந்திரானி வீரவர்தன - அங்கத்தவர்
8. திரு.எமில் சரத் பெரேரா - அங்கத்தவர்
9. திருமதி.ஆர்.பீ.மங்கலிகா - அங்கத்தவர்
10. திருமதி.அனோமா கமகே - அங்கத்தவர்
11. திருமதி.சமந்தி நாரங்கொட - அங்கத்தவர்
12. திரு.எச்.எம்.ஜீ.ஹேரத் - அங்கத்தவர்

பிள்ளையின் கனவினை

உங்களுடைய கனவான ஆக்கிக்கொண்டு

பிள்ளை பலமான வெற்றிகொள்வதற்காக

இடமளியுங்கள் ..................

# உள்ளடக்கம்


- ஆச்சர்யமான பிள்ளையொன்றை உருவாக்குவதில் பெற்றோரின் வகிபங்கு 5
- கட்டிளம் பருவத்திலுள்ள உங்களுடைய பிள்ளைக்கு பெற்றோராகிய உங்களின் கடமைப்பொறுப்புகள் 6
- பாடசாலையிலிருந்து தொழில் உலகிற்குள் பிரவேசிக்கும் உங்கள் பிள்ளையின் எதிர்காலம் 11
- Z புள்ளித்திட்ட அடிப்படையில் உயர் கல்வி 11
- உயர் கல்விக்காக வட்டியில்லாக் கடன் திட்டம் 12
- உயர் கல்வி வாய்ப்புகள் 12
- தொழிற் பயிற்சிப் பாடநெறி துறைகள் 13
- வட்டியில்லாக் கடன் திட்டத்தின்கீழ் பட்டம் வழங்குகின்ற தனியார் பல்கலைக்கழகங்கள் 14
- பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்துள்ள உங்களுடைய பிள்ளைக்கு தொழிற்பயிற்சி மேற்கொள்வதற்காக அரசாங்கத்துடன் இணைந்த ஏனைய பயிற்சி நிறுவனங்கள் 15
- NVQ என்றால் என்ன? 16
- தொழில் முயற்சியான்மையில் ஈடுபடுதல் 17

## ஆச்சர்யமான பிள்ளையொன்றை உருவாக்குவதில் பெற்றோரின் வகிபங்கு ......

பெற்றோரிடம் இருக்கின்ற மிகப் பெறுமதிவாய்ந்த சொத்து தங்களுடைய பிள்ளைகளாகும். பிள்ளை - பெற்றோர் இடையேயான பிணைப்பு உலகிலுள்ள ஏனைய சகலவிதமான பிணைப்புகளை விடவும் விசேடமானதாகும். பிள்ளையின் வாழ்வியல் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியத்துவம்வாய்ந்த கடமைப்பொறுப்புக்களை மேற்கொள்கின்ற பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகளின் உடல், உளவியல் மற்றும் சமூக நல்வாழ்வினை ஏற்படுத்துவதற்காக தங்களுடைய பொறுப்பினை மேற்கொண்டு, இலாப நோக்கமின்றி கடமையாற்றுகின்றனர்.

உங்களுடைய பிள்ளை சிறுபராயத்தினைக் கடந்து அவர்களுடைய வாழ்க்கையில் ''கட்டிளம் பருவத்திற்குள்'' நுழைகின்றனர். இந்தக் காலப்பகுதியினுள் உங்களுடைய பிள்ளை பல்வேறு உடல் மற்றும் உளவியல் ரீதியான மாற்றங்களுக்கு ஆளாகின்றமையால், அதுசம்பந்தமாக முறையான தெளிவுடன்கூடியதாக செயற்பட்டு, சிறந்த பிரஜையொருவரை உருவாக்கி சமூகத்தில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான சூழலை அமைத்துக்கொடுத்தல் உங்களுடைய கடமையாகும்.



❖ உடல் ரீதியாக இடம்பெறும் மாற்றங்கள் .........
- தன்னுடைய உடல் வெளித்தோற்ற இயல்பு சம்பந்தமாக கவனத்தில் கொள்ளல்.
- இரண்டாம்நிலை பால்நிலை குணவியல்புகள் வெளிப்படுதல்.
- எதிர்பால் மீதான கவர்ச்சி





❖ இனவிருத்தி மாற்றங்கள் ............
- பகுப்பாய்வு ரீதியான, தர்க்கரீதியான சிந்தனை ஆற்றல்கள் விருத்தியடைதல்
- தேடல் இருத்தல்

❖ சமூக மனவெழுச்சிசார் மாற்றங்கள் ............
- சுயாதீனத்தன்மை
- தன்னுடைய அடையாளத்தைக் கட்டியெழுப்புதல்
- நண்பர்கள் குழாத்தினருடன் உறவுகொள்ளல்
- பொறுப்புக்களை ஏற்பதில் உள்ள ஆர்வம்
- உணர்ச்சிவசப்படுதல்

உங்களுடைய பிள்ளையிடம் இந்தக் காலப்பகுதியினுள் இடம்பெறுகின்ற இதுபோன்ற மாற்றங்களைப் பற்றிய சிறந்த தெளிவுடன் கூடியதாக செயற்படுவதன் மூலம் சாதனைமிகுந்த பிள்ளையொன்றை சமூகத்திற்காக உருவாக்கலாம்.

**கட்டிளம் பருவத்திலுள்ள உங்களுடைய பிள்ளைக்கு பெற்றோராகிய உங்களுடைய கடமைப்பொறுப்புக்கள் ...............**



❖ பிள்ளைகளுக்கு முன்மாதிரியான நபராக இருங்கள்

பிள்ளை எப்பொழுதும் பெற்றோரைப் பின்பற்றுவர். தங்களுடைய முதலாவது ஆசான்கள் பெற்றோர்களாவதால் பெரும்பாலும் அவர்களுடைய நடத்தைப் பாங்குகளையே பின்பற்றுவர்.



- பெற்றோர் துர்நடத்தைகளில் இருந்து விடுபடல். (மதுபானம், போதைவஸ்து பாவிக்காதிருத்தல்)
- பிள்ளைகளுக்கு மத்தியில் பெற்றோர்கள் தங்கள் இருவருக்குமிடையே சண்டை, சச்சரவுகளை ஏற்படுத்திக்கொள்ளாதிருத்தல்.
- பொறுமைகொள்ளல்.
- சிறந்த குடும்ப வாழ்க்கையை நடாத்துதல்.

❖ பிள்ளை புரிந்துகொள்ளும் வகையில் அன்பு செலுத்துங்கள்

பிள்ளை புரிந்துகொள்ளும் வகையில் அன்பு செலுத்துதல் வேண்டும். உயர்ந்த சுயஅபிமானம்மிக்க பிள்ளையொன்றுக்காக பெற்றோரின் அன்பு அத்தியாவசியமாகும்.

- பிள்ளையின் உடல் மற்றும் உள சுகாதார விருத்திக்காக உயர்ந்தபட்ச ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். அதற்காக போசாக்குணவு உள்ளிட்ட போதுமானளவு நித்திரை, உடற்பயிற்சி, விளையாட்டு செயற்பாடுகள் போன்றவற்றுக்காக ஈடுபடுத்துதல்.
- சுய அபிமானத்தை விருத்திசெய்தல்.
- பிள்ளையின் சிறந்த பாதுகாவலன் என்பதை உணர்த்துங்கள்.
- விசேடமாக மகள் எனின் தாயின் மிகக் கிட்டிய அன்பு அத்தியாவசியமாகும்.

❖ எப்பொழுதும் உங்களுடைய பிள்ளையை நம்புங்கள் ............

தங்களுடைய பெற்றோர் தன்னை நம்புகிறார்கள் என்பதை பிள்ளை அறிந்திருப்பதன் மூலம் அவர் தமக்குள் சுய அபிமானத்தை விருத்தி செய்துகொள்வதற்கு காரணமாக அமையும்.



- தேவையற்ற விதத்தில் கட்டுப்பாடு விதிக்காமை.
- சிறந்த நண்பன் நண்பிகளுடன் உறவாடுவதற்கான வழியை அமைத்துக்கொடுக்கவும்.
- நண்பர்களிடையே அவர்கள் ஒருவரையொருவர் ஒப்பிட வேண்டாம்.

❖ அவர்களுக்கு அவராக அமைந்தொழுக இடமளியுங்கள்

பிள்ளை மூலமாக தன்னுடைய எதிர்பார்ப்புகளை அடையாமல், பிள்ளையின் எதிர்பார்ப்புகளை அடைந்துகொள்வதற்காக இடமளித்தல் வேண்டும்.

- சுய நம்பிக்கையைக் கட்டியெழுப்புங்கள்.
- முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் தீர்மானங்களை மேற்கொள்ள இடமளிக்கவும், கண்காணிக்கவும்.
- தலைமைத்துவப் பண்புகள் மேம்பாடடைகின்ற முறையில் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கவும்.
- தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்ள வேண்டாம். (பெற்றோரின் நோக்கங்களை அடைவதற்காக பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டாம்).
- கல்வித் துறையில் உங்களுடைய விருப்பத்திற்கு மாறாக, அவர்களுடைய திறமைகளுக்கேற்ப மேலதிக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கவும்.

❖ பிள்ளையை மதிப்பதற்குப் பழகுங்கள்

மதிக்கவேண்டிய எல்லா இடங்களிலும் பிள்ளையை மதிப்பதன் மூலம் அவரின் தன்னம்பிக்கை விருத்தியடையும்.

- முடிந்தளவு எல்லா சந்தர்ப்பங்களிலும் மதிக்கப் பழகுங்கள்.
- கவலை, மனவிரக்தி போன்ற மனவெழுச்சிகளின் சமநிலையற்ற தன்மை அதிகமாக இந்த வயதுப் பிள்ளைகளிடையே ஏற்படலாம். அது சம்பந்தமாக கவனம் செலுத்துங்கள்.
- ஏனையவர்களின் திறமைகளை மதிப்பிடுவதற்குப் பதிலாக பலாபலன் / ஆற்றல்களை மதிக்கவும்.



❖ சமூகத்தின் ஊடாக சிறந்த விடயங்களை இனங்காண்பதற்கு உதவுங்கள் ...............

பிள்ளை சமூகத்தில் செயற்படுகின்றபோது சிறந்த விடயங்களை அடைவதற்கும் முக்கியமில்லாத மற்றும் பாதகமான விடயங்களை இனங்கண்டு நிராகரிப்பதற்கும் முடியுமானவகையில் அவர்களுடன் வினைத்திறன்மிக்க தொடர்பாடலில் ஈடுபடவும்.

- இந்தக் காலப்பகுதியில் இயல்பாகவே எதிர்பால் மீதான கவர்ச்சி ஏற்படும். அதன் பலனாக அன்பான உறவுத் தொடர்புகளும் ஏற்படுவது சாதாரணம். அவற்றைக் கடுமையாக கட்டுப்படுத்துவதன் மூலம் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆதலால் கல்வி பற்றிய இலக்கினை பிள்ளையிடம் ஏற்படுத்தவும். அதன்மீது பயணிப்பதற்காக உதவுங்கள்.
- பழகும் நண்பர்கள் பற்றி சிறந்த தெளிவொன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- போதைக்கு அடிமையாதல், பாதுகாப்பற்ற பாலியல் தொடர்புகளில் ஈடுபடுவதை தடுத்துக்கொள்ளுங்கள்.
- இணையதள பாவனை போன்ற விடயங்களைப் பற்றி நல்ல முறையில் அவதானத்தை செலுத்துங்கள்.
- பல்வேறு விதமான அடிமையாதல்கள் (Addictions) பற்றி விழிப்புடன் இருங்கள்.

## ❖ பிள்ளைக்கு நம்முடையது என்னும் பண்பை வளர்க்கவும்

தற்காலத்து பிள்ளைகளிடம் ''நம்முடையது'' என்பது பற்றி சிந்திப்பதற்கான சந்தர்ப்பங்கள் படிப்படியாகக் குறைந்துள்ளது. கல்வி முறை, சமூக ஊடகம் மற்றும் பொதுசன ஊடகம் போன்றவற்றின் மூலம் இந்த எண்ணக்கரு பற்றிய கலந்துரையாடல்கள் அரிதாகும். இது நாடொன்றின் எதிர்காலத்தினை நேரடியாகப் பாதிக்கும் காரணியாக உள்ளமையால் அவர்களுக்கு ''நம்முடையது'' என்பது பற்றிய உணர்வினை வளர்த்தல் வேண்டும்.

- உள்நாட்டு பொருட்களை மதிப்பதற்குப் பழக்கப்படுத்துங்கள்.
- பிள்ளைகளுக்கு வரலாற்றைப் பற்றிக் கற்றுக்கொடுங்கள்.
- உள்ளூர் உணவுப் பழக்கங்கள் பற்றிய தெளிவினைப் பெற்றுக்கொடுத்து, அவற்றுக்காக பிள்ளையைப் பழக்கப்படுத்துங்கள்.
- சுதேச பாரம்பரியங்கள், வழக்காறுகளை மதிப்பதற்கும் குடும்ப உறுப்பினர்களிடையே தொடர்புகளை மேற்கொண்டு செல்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.



❖ **உங்களுடைய பிள்ளையின் சிறந்த நண்பராகுங்கள் .........**

**பிள்ளையுடன் அதிகமான நேரத்தைக் கழித்து அவரின் தேவைகளை சரியாக இனங்காணுங்கள். அவரின் எதிர்கால எதிர்பார்ப்புகளை வெற்றிகொள்வதற்கு ஒத்துழைப்பு வழுங்குங்கள்.**

- **பிள்ளையுடன் வெளிப்படையாக நடந்துகொள்வதாக காட்டிக்கொள்ளுங்கள்.**
- **பிள்ளைக்கு சிறந்த முறையில் செவிசாய்க்கவும்.**
- **பிள்ளையைத் தனிமைப்படுத்த வேண்டாம்.**

❖ **திறமைகளை இனங்கண்டு சரியாக எழுந்துநிற்பதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் .........**

**தனிப்பெரும் திறமைகளை வளர்ப்பதன் மூலம் பிள்ளைக்கு சிறந்த பிரஜையாக ஆவதற்குத் தேவையான இடத்தை அமைத்துக்கொடுத்தல் பெற்றோரின் கடமையாவதுடன் பொறுப்பும் ஆகும் என்பதை சிந்தியுங்கள். இக்காலத்தில் பிள்ளை புத்தூக்கத்துடன் தேடல் மீதான ஆர்வங்களைக் காட்டுவர். எனவே,**

- **பிள்ளையின் பலவிதமான திறமைகளை இனங்காண்பதற்கும் அவற்றை வளர்ப்பதற்கும் தேவையான வழியை அமைத்துக்கொடுக்கவும்.**
- **ஆக்கத்திறன் விருத்திக்கான இடத்தை அமைத்துக்கொடுக்கவும்.**
- **சுத்தம், ஒழுங்கு, நேரத்திற்கு வேலை செய்தல் போன்ற நற்பழக்கங்களை வளர்க்கவும்.**
- **வீட்டினுள் கல்விக்குப் பொருத்தமான சூழலொன்றை உருவாக்குங்கள்.**
- **தகுதியான மற்றும் பொருத்தமான தொழில் குறிக்கோள் ஒன்றை ஏற்படுத்திக்கொடுங்கள். (பல்வேறு தொழிற் பயிற்சி வாய்ப்புகள், புதிய தொழில்கள் மற்றும் தொழில் உலகம் பற்றிய தெளிவினைப் பெற்றுக்கொடுங்கள். )**

**பாடசாலையிலிருந்து தொழில் உலகில் பிரவேசிக்கும் உங்கள் பிள்ளையின் எதிர்காலம் ...............**

க.பொ.த (உ.த) இன் பிற்பாடு அல்லது க.பொ.த (சா.த) இன் பிற்பாடு அல்லது க.பொ.த (சா.த) இற்கு முன்னர் அல்லது பாடசாலைக் கல்வி பெறுகின்ற பிள்ளை மூன்றாம்நிலைக் கல்வி பெறுவதற்காக ஈடுபடுத்துதல் வேண்டும். மூன்றாம்நிலைக் கல்விக்காக ஈடுபடுகின்றபோது, கீழ்வரும் விடயங்களைப் பற்றி அவதானத்தைச் செலுத்துங்கள்.



ஆற்றல்கள் மற்றும் விருப்பங்கள் → உளச்சார்பு பரீட்சித்தல் ஊடாக இனங்காணல்

- பாடசாலையின் பிற்பாடு
  - கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகள்
    - பல்கலைக்கழக கல்வி
    - உயர் கல்வி
    - தொழிற்பயிற்சி
  - தொழில் வாய்ப்புகள்
    - அரச துறை
    - தனியார் துறை
    - வெளிநாட்டு தொழில் துறை
    - சுயாதீன தொழில் துறை
    - சுயதொழில் வியாபார துறை

**Z புள்ளித்திட்ட அடிப்படையில் உயர் கல்வி**

- அரசாங்க பல்கலைக்கழக கல்வி
- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்படுகின்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கான புலமைப்பரிசில்கள்
- உயர் கல்விக்காக வட்டியில்லாக் கடன் திட்டம்
- Z புள்ளித்திட்ட அடிப்படையில் தொழில்வான்மைத்துவ பயிற்சிப் பாடநெறிகள்
  உதா: கல்விக் கல்லூரி

## உயர் கல்விக்காக வட்டியில்லாக் கடன் திட்டம்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூ.08 இலட்சம் வரை மற்றும் மேலதிக செலவுகளுக்காக ரூ.03 இலட்சம் வரையான கடன் தொகையொன்று வழங்கப்படும். அதனை 04 வருடங்களின் பிற்பாடு தேவையேற்படின் மேலும் ஒருவருட சலுகைக் காலத்தின் பிற்பாடு 06 அல்லது 07 வருடங்களில் செலுத்துதல் வேண்டும்.

## உயர் கல்வி வாய்ப்புகள் ............

- அரசாங்க உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் அரச அங்கீகாரம்பெற்ற நிறுவனங்கள்
- தனியார்துறை கல்வி நிறுவனங்கள்
- அரசாங்கத்தின்கீழ் உள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
- மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவுசெய்த தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

# தொழிற் பயிற்சிப் பாடநெறி துறைகள்

01. Agriculture and Livestock - விவசாயம் மற்றும் விலங்கு வேளான்மைத் துறை

02. Arts and Media - கலை மற்றும் பொதுசன ஊடகத் துறை

03. Automobile Repair and Maintenance - வாகனம் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பிரிவு

04. Aviation, Aeronautics and Navigation - விமானம் ஓட்டுதல், விண்வெளி பயணம் மற்றும் கடல்சார் துறை

05. Building and Construction - கட்டிடங்கள் மற்றும் நிர்மானத்துறை

06.Computer and Information Technology - கணணி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை

07.Electrical, Electronics and Telecommunication - இலத்திரனியல், இலெக்ட்ரோனிக் மற்றும் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை துறை

08.Finance and Management - நிதி மற்றும் முகாமைத்துவ துறை

09. Gem and Jewellery - இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறை

10. Hotel and Tourism - ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறை

11. Leather and Footwear - தோல் மற்றும் பாதணி உற்பத்தித் துறை

12. Medical and Health Science - மருத்துவ மற்றும் சுகாதாரத் துறை

13. Metal and Light Engineering - அணல் மற்றும் மென் பொறியியல் துறை

14. Office Management - அலுவலக முகாமைத்துவ துறை

15. Personal and Community Development - தனிமனித மற்றும் சமூக அபிவிருத்தி துறை

16. Printing and Packaging - அச்சு மற்றும் பொதியிடல் துறை

17. Rubber and Plastics - இறப்பர் மற்றும் ப்ளாஸ்டிக் துறை

18. Textile and Garments - புடவை மற்றும் ஆடைத் தொழிற்றுறை

19. Wood Related - மரத் தளபாடங்களுடன் இணைந்த துறை

20. Language and Teacher Training - மொழி மற்றும் ஆசிரியர் பயிற்சித் துறை

21. Other - ஏனைய துறைகள்

## வட்டியில்லாக் கடன் திட்டத்தின்கீழ் பட்டம் வழங்குகின்ற தனியார் பல்கலைக்கழகங்கள்

**பட்டம் வழங்குதல் மற்றும் உயர் கல்விக்காக வட்டியில்லாக் கடன் திட்டத்தின்கீழ் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்**


| No | Institute | | Contact No |
|---|---|---|---|
| 01 | SLIIT | Sri Lanka Institute Of Information Technology - Colombo | 0117544801 |
| 02 | NSBM | National School of Business Management | 0117 321000 |
| 03 | CINEC | CINEC Campus Sri Lanka - Malabe | 011 7544801 |
| 04 | ICASL | Institute Of Chartered Accountants of Sri Lanka | |
| 05 | SANASA | Sanasa Campus Private University -Hettimulla , Kegalle | 035 4927768 |
| 06 | HORIZN | Horizon University - Malabe | 011 4365555 |
| 07 | KIU | Kaatsu International University | 011 2741878 |
| 08 | SLTC | Sri Lanka Technological Campus - Padukka | 011 2100500 |
| 09 | SAEGIS | SAEGIS Campus - Nugegoda | 011 7430000 |
| 10 | AQUINAS | AQUINAS Collage of Higher Studies | 011 7389115 |
| 11 | SIBA | Sri Lanka International Buddhist Academy | 081 2421693 |
| 12 | ICHEM | Intitule of Chemistry Ceylon - Rajagiriya | 011 2861231 |
| 13 | ICBT | ICBT Campus | 077 7314850 |
| 14 | BCI | BCI campus - Negombo | 031 2224422 |
| 15 | ESOFT | ESOFT Metro Campus - Colombo | 011 7572572 |

**பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்துள்ள உங்களுடைய பிள்ளைக்கு தொழிற்பயிற்சி மேற்கொள்வதற்காக அரசாங்கத்துடன் இணைந்த ஏனைய பயிற்சி நிறுவனங்கள்**

| தொடர் இலக்கம் | குறியீடு | நிறுவனம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01 | SLIATE (HNDA) | Sri Lanka Institute of Advanced Technological Education | |
| 02 | OUSL | The Open University of Sri Lanka | 011 2881000 |
| 03 | | Ocean University of Sri Lanka | 011 4346979 |
| 04 | | University of Vocational Technology<br>தொழில்நுட்ப பல்கலைக்கழகம் | 011 2630706 |
| 05 | | University Collages பல்கலைக்கழக கல்லூரிகள், இவை மாவட்ட மட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. | |
| 06 | DTET | Department of Technical Education and Training<br>தொழில்நுட்பக் கல்லூரிகள் நாடளாவிய ரீதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. | 0112348897 |
| 07 | CGTTI | Ceylon Germen Technical Training Institute | 011 26050625 |
| 08 | AETI | Automobile Engineering Training Institute | 011 2572977 |
| 09 | IAESL | Institute of Automotive Engineers Sri Lanka | |
| 10 | IESL | Institute Of Engineers Sri Lanka | 011 2687047 |
| 11 | SLT | SLT Mobitel பயிற்சி நிறுவகம், வெலிசரை, மொரட்டுவை, பேராதனை | 011 2956721 |
| 12 | NAITA | தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகாரசபை | 0112888782 |
| 13 | VTA | இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | 0112352190 |
| 14 | SLITHM | Sri Lanka Institute of Tourism & Hotel Management<br>இலங்கை சுற்றுலாத்தொழில் மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | 011 2382213 |
| 15 | GJRTI | இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆய்வு மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவனம் | 011 2579182 |
| 16 | | பிரதேச ரீதியில் உள்ள ஏனைய பயிற்சி நிறுவனங்கள் | |
| 17 | SLITA | Sri Lanka Institute of Textile and apparel | 011 2632406 |
| 18 | SLTTI | Sri Lanka Media Training Institute | 011 2674925 |
| 19 | SLIA | Sri Lanka Institute of Architects | 011 2689888 |
| 20 | SLCJ | Collage of Journalism | 011 5353635 |
| 21 | SLIM | Sri Lanka Institute of Marketing | 011 2675000 |
| 22 | CIM | Chartered Institute of Marketing | 0778722620 |
| 23 | CIMA | Chartered Institute of Management Accounting | 0112503880 |
| 24 | AAT | Association of Account Technician of Sri Lanka | 011 2559669 |

## NVQ என்றால் என்ன?

**இது தொழில் செய்யும் ஆற்றல்களின்மீது வழங்கப்படுகின்ற சான்றிதழாகும். தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் (National Vocational Qualification) சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படுகின்ற சான்றிதழாவதுடன் தொழிற் கல்விக்காகவேண்டி இதனை வழங்கிவைக்கப்படுகின்றது.**



## தொழில் முயற்சியான்மையில் ஈடுபடுதல் .........

**பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த பிற்பாடு உங்களுடைய பிள்ளைக்கு முயற்சியான்மைக்கு ஈடுபடுவதற்கு இயலுமாகலாம். அதற்காக கீழ்வரும் நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக்கொள்ள இயலும்.**

| தொடர் இலக்கம் | நிறுவனம் | தொலைபேசி இலக்கம் | வழங்கிவரும் சேவை |
|---|---|---|---|
| 01 | தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை | 011 2368393 | • சந்தை தகவல்களை பகிர்ந்தளித்தல்<br>• சந்தை வாய்ப்புகளைத் தேடிக்கொள்வதற்காக உதவுதல்<br>• பயிற்சி உதவிகளை வழங்குதல் |
| 02 | கைத்தொழில் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் | 011 2379800<br>011 2379850 | • கைத்தொழில்களுக்காக தொழில்நுட்ப சேவை ஆலோசனைகளை வழங்குதல்<br>• கைத்தொழில் தொழில்நுட்ப ஆய்வுகளை நடாத்துதல் |
| 03 | இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை | 011 2605156<br>011 2605323/6/7 | • கைத்தொழில் தகவல்கள் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்<br>• முயற்சியான்மை அபிவிருத்தி சேவைகளை வழங்குதல் |
| 04 | இலங்கை தரநிர்ணய நிறுவகம் | 011 2671567<br>011 2671579 | • தேசிய தரங்களைத் தயாரித்தல்<br>• பொருட்களின் தரச் சான்றிதழ் வழங்குதல் |
| 05 | இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | 011 7270270 | • தொழில்முயற்சியாளர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்<br>• கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக வங்கிகளுடன் ஒருங்கிணைபபுச் செய்தல் |
| 06 | தேசிய நுண்கலைகள் சபை | 011 2784425 | • இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கண்காட்சிகளை நடாத்துதல் மற்றும் சிற்பிகளைப் பயிற்றுவித்தல் |
| 07 | இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை | 011 2300705/11<br>011 2300715 | • ஏற்றுமதி அபிவிருத்திக் கொள்கை பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்<br>• ஏற்றுமதித் துறை சம்பந்தப்பட்ட சகலவிதமான ஆலோசனைகளையும் மற்றும் தகவல்களையும் வழங்குதல் |
| 08 | கைத்தொழில் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் | 011 2449136 | • கைத்தொழில் அபிவிருத்திக்காக சர்வதேச ஒத்துழைப்புகளை விருத்தி செய்தல்<br>• தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு மாணவர்களை சேர்த்தல்<br>• பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் |
| 09 | லக்சல (இலங்கை கைப்பணி கைத்தொழில் சபை) | 011 2580579 | • கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களை விரிவுபடுத்துதல்<br>• கைப்பணிக் கைத்தொழில் நுட்பவியலாளர்களைப் பயிற்றுவித்தல் |
| 10 | சிறு வியாபார அபிவிருத்தி பிரிவு | 011 2665201<br>011 2662002 | • முயற்சியான்மை அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்<br>• குழு தொழில்நுட்ப பயிற்சி வழங்குதல் |

| | | | |
|---|---|---|---|
| 11 | **கண்ணொருவ விவசாயப் பயிர் திணைக்களம்** | 081 2388011<br>081 2388234 | • **பூங்காவன பயிர் முயற்சியான்மை திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைகளை வழங்குதல்** |
| 12 | **விதாதா வள நிலையம்** | **சகல பிரதேச செயலகங்களிலும் நிறுவப்பட்டுள்ளன** | • **சுயதொழில் வியாபாரங்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான பயிற்சி மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்** |